# வெளிவிவகார அமைச்சரின் அறிக்கை

**செப்டம்பர் 14, 2015**

**அதிகாரபூர்வமற்ற மொழிபெயர்ப்பு**

இந்தியா எப்போதும் நேபாலத்தின் அமைதி, ஸ்திரத்தன்மை, ஒற்றுமை மற்றும் வளர்ச்சியினை ஆதரித்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில், நேபாலத்தில் வன்முறை, ஸ்திரமற்றநிலை, உள் போராட்டம் மற்றும் அரசியல் வேறுபாடுகள், அத்துடன் அதன் எதிர்மறை விளைவுகள் ஆகியவற்றினை நாம் கண்டுள்ளோம். நேபால் இன்னும் இந்த நெருக்கடியிலிருந்து வெளிப்படுவதற்கு முன்னரே ஏப்ரல் 2015 இல் ஒரு பெரிய பூகம்பம் சீரழிவை ஏற்படுத்தி நாட்டில் முக்கிய சேதாரத்தை ஏற்படுத்தி உள்ளது.

அரசியல் அல்லது இயற்கை நெருக்கடியாக் இருப்பினும் , இந்திய அரசு எப்போதும் நேபாலத்தின் செழிப்பு மற்றும் நல்வாழ்வை விரும்பியதாகவும், மற்றும் நேபாலத்திற்கு எந்த துன்ப நேரத்திலும் துணையாக நிற்பதினை தன் கடமையாக கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக, நேபால் அரசியல் தலைமை தீவிரமாக பரஸ்பர கலந்தாலோசனைகள் மற்றும் உரையாடல் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைக்கும் விமர்சனமான முக்கியமான பணியில் ஈடுபட்டு வருகிறது.

அரசியலமைப்பு எல்லா பகுதிகளையும்,பிரிவுகளையும் இணைந்து செயல்படுத்தும் என்ற உற்சாகமூட்டும் குரல்கள் பல தூரத்திலிருந்த நேபாள தலைவர்களிடமிருந்து கேட்டது மற்றும் இதுவே ஒரு முற்போக்கான, நவீன மற்றும் ஒன்றுபட்ட நேபால் அமைய மைய புள்ளியாக அமையும். அனைத்து அரசியல் தலைவர்களும் இருந்து

வரும் இந்த குரல்கள் இந்தியாவில் உள்ள அனைவருக்கும் மிகவும் சந்தோஷத்தினை அளிக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக பல சவால்களை தலையெடுப்பதில் ஞானம் மற்றும் திறனை நேபாள அரசியல் தலைமை வெளிப்படுத்தியுள்ளனர், இதன் விளைவாக சமாதான முன்னெடுப்புகளில் கணிசமான வெற்றிகள் மற்றும் இரண்டு வெற்றிகரமான தேர்தல் மூலம் உள்ளடக்கிய பல கட்சி அரசியலமைப்பு ஜனநாயகத்தின் ஒருங்கிணைப்பும் கிட்டியுள்ளது. நேபால் சமாதான முன்னெடுப்புகளில் சாதனைகள் செய்துள்ளதிணை நாம் புகழுகிறோம்.

அரசியலமைப்பிலும் வரைவு செயல்முறையில் அரசியல் நிர்ணய சபையின் சமீபத்திய முன்னேற்றத்தினால் பல சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதிணை நாம் வரவேற்று பாராட்டுகிறோம்.

நேபாலில் பல பகுதிகளில் நடந்துவரும் எதிர்ப்புக்கள் மற்றும் கலவரங்கள் தொடர்பாக இந்தியா அக்கறை தெரிவித்துள்ளது. கொடூரமான வன்முறை மீண்டும் நேபாலத்தின் ஆன்மாவினை ஆட்டியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் நேபாளி குடிமக்கள் அல்லது அரசாங்க அதிகாரிகளாக இருந்தாலும் அனைத்து சம்பவங்களில் சிந்தியாது நேபாள இரத்தமே ஆகும். நேபால் நிலநடுக்கத்தின் சோகத்திலிருந்து வெளியே வர இருக்கும் போது, இந்த அபிவிருத்திகள் உலகின் எந்த மனிதாபிமான நாட்டினையும் பாதிக்கும்.

இந்த சூழலில், அனைத்து அரசியல் சக்தி பகுதியில் தொடர்ச்சியான நெகிழ்வுத்தன்மயினை நாம் வலியுறுத்துகிறோம் ஏனெனில்,வன்முறையற்ற சூழ்நிலையில் எந்த தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கும் உரையாடல் மற்றும் சாத்தியமான மிகப் பரந்த ஒப்பந்தத்தின் மூலம் தீர்வு காணப்படும். முழுமையாக சொந்தமாக

மற்றும் நேபாள சமூகத்தின் எல்லா பகுதிகளுக்கும், பகுதியினரின் அபிலாசைகளையும் தங்கக்கூடிய ஒரு அரசியலமைப்பு, ஒரு அமைதியான மற்றும் வளமான நேபாலத்திற்கு ஒரு நீடித்த அடித்தளத்தை இடும் மற்றும் நேபாலத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்கு மைய புள்ளியாக மாறும்.

நேபால் அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் மற்றும் அறிவுஜீவிகள் எப்போதும் நெருக்கடி காலங்களில் முதிர்ச்சி மற்றும் தீர்க்கதரிசனத்தினை வெளிக்காட்டியுள்ளனர். அவர்களின் தொடர்ந்த தலைமை மற்றும் ஞானத்தினாலேயே நேபால் அதன் தற்போதைய சிக்கல்களை சமாளிக்க முடியும். ஒரு நவீன நேபால் கட்ட,ஒரு நீடித்த மற்றும் நெகிழ்திறன் அரசியலமைப்பு வேண்டும். இந்த முயற்சியில் நேபால் தலைவர்கள் ஒரு கல்லைக்கூட விட்டு வைக்க மாட்டார்கள் என நாம் நம்புகிறோம்.

நேபால் அரசு மற்றும் அதன் மக்களுடன் மேலும் நெருக்கமான மற்றும் சுமுகமான உறவுகள் வலுப்படுத்துவதற்கு இந்திய அரசு உறுதி செய்ததோடு,அமைதி, நிதானம் மற்றும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு நேபால் மக்களின் அபிலாஷைகளை ஏற்ப, அனைத்து ஆதரவு மற்றும் உதவி வழங்க தொடரும்.

**புது டில்லி,**

**செப்டெம்பர் 14,2015**